பக்கங்கள்:-பத்து

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 12 | சனிக்கிழமை | (28.08.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 253

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை

♦வங்கிக் கணக்கு அவசியமில்லை

♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்

♦365 நாள் சேவை

♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

# எரிக் சொல்ஹெய்மை வெளியேற்ற வேண்டும். அல்லது; சமாதான நடவடிக்கைகளிலிருந்து

# நோர்வே அரசு உடன் விலகவேண்டும்

## அந்நாட்டுப் பிரதமருக்கு ஜே.வி.பி. அவசர கடிதம்


(நமது நிருபர்)

**இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளராக கடமையாற்றும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹேய்மை சமாதான நடவடிக்கைகளில் இருந்து உடனடியாக விலக்கிக்கொள்ள வேண்டும். தவறினால் சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வே அரசு விலகவேண்டும்.**

இவ்வாறு வலியுறுத்தி நோர்வேப் பிரதமருக்கு ஜே.வி.பி. அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சியில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹேய்மின் பணிகள் எல்லை கடந்து விட்டதாக குற்றஞ்சாட்டி அனுப்பி வைக்கப்பட்டுள்ள அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளர என்ற அந்தஸ்து நோர்வேக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சமாதான ஏற்பாட்டாளர் குழுவின் விசேட தூதுவரான எரிக்சோல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறார். சமாதான

(10 ஆம் பக்கம் பார்க்க)



## பிரதமரின் பாதுகாப்பு திடீரெனக் குறைப்பு

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டு வந்த பொலிஸ் பாதுகாப்பு திடீரெனக் குறைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மிக முக்கிய தலைமைப் பொறுப்பில் உள்ள பிரதமரின் பாதுகாப்பு எந்தவித முன்னறிவித்தலும் இன்றி திடீரென குறைக்கப்பட்டுள்ளமையை அடுத்து இது குறித்து விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவுக்கு அமைச்சரவை பணித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எம்முடன் பேச விரும்பினால் அழைப்பினை அனுப்புங்கள்

### புலிகளைக் கோருகிறார் ஜே.வி.பி. எம்.பி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டிய அவசியம் எமக்கில்லை, இருந்தாலும் அவர்கள் தம்முடன் பேச வருமாறு அழைப்பினை அனுப்பினால் அது குறித்து நாம் பரிசீலித்து எமது முடிவை அறிவிப்போம் என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், ஜே.வி.பியுடன் பேச தாம் தயாராக இருப்பதாக கூறியிருந்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா அணி உறுப்பினர் பதுளைச் சிறைக்கு மாற்றம்

## ராசிக்குழு உறுப்பினர் பொலிஸாரால் கைது



சமஷ்டி அமைப்பின் தலைவரும் முன்னாள் ஒன்ராரியோ முதல்வருமான பொப்ரே நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இச் சந்திப்பில் கனடிய அரசியல் விஞ்ஞான [illegible] போதனாசிரியர் கலாநிதி கமரூனும் கலந்து கொண்டார்.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த கருணா அணியைச் சேர்ந்த கைதியொருவர் பதுளை சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி வந்தாறுமூலையில் வைத்து கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட குணசேகரம் சுபேந்திரன் என்பவரே பதுளை சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட

(10 ஆம் பக்கம் பார்க்க)

(மட்டக்களப்பு)

இராணுவ உளவாளியான ராசிக்குழு உறுப்பினர் ஒருவரை கைக்குண்டுடன் நேற்று முன்தினம் மட்டக்களப்பு திமில தீவுப் பகுதியில் வைத்துப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் - இராணுவம் கூட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயமே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மட்டக்களப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் யோகநாதன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு பிரிவுக்கு புதிய பணிப்பாளர்

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக பிரிகேடியர் கபில ஹெந்தவிதாரண நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றி இராஜினாமாச் செய்திருந்தார்.

பதவியடிப்படையில் தனக்குக் கீழ்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டதை ஆட்சேபித்தே அவர் இராஜினாமாச் செய்திருந்தார்.

தற்போது அவர் பணியில் மீண்டும் சேர்க்கப்பட்டதுடன் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். பிரிகேடியர் ஹெந்த விதாரண தற்போது மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.(க-60)

# வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் அரச நியமனம்

## யாழ். அரச அதிபருக்கு உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் அரச துறையில் பொருத்தமான வேலைவாய்ப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பாக அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்ததனபால யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனுக்கு அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் விடயத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை குறித்து அண்மையில் யாழ். வந்த ஜெயந்ததனபாலவிடம் யாழ். அரச அதிபர் எடுத்துக் கூறியிருந்தார். கொழும்பு திரும்பிய ஜயந்ததனபால உடனடியாக இவ் விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இதனையடுத்து யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பட்டதாரிகளையும் அரச துறையில் உள்வாங்குவதற்கு ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும் தற்போது பட்டதாரிகளுக்கான பதவிகள் இனங்காணப்பட்டுள்ளதாக ஜயந்ததனபால தெரிவித்துள்ளதாகவும் அரச அதிபர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# நல்லூரான் திருவடிக்கு



எட்டாம் திருவிழா

## உளமலரே பூக்குதையா!

நிந்தனைசெய் வோர் தமையும்
நீளுலகில் காத் தருளும்
உந்தன் நிலை யுணர
உளமலரே பூக்கு தையா!

ஆறுபடை வீ டமர்ந்து
ஆட்டி யெமைப் படைக்கும்
தேறுதலின் நா யகனே
தேசுதனை யருள் வாய்!

நல்லை யெனுந் தோறும்
நாவே இனிக் குதையா
தொல்லை தனைக் களையும்
தூய்மை பிறக் குதையா!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## காசினி போற்றும் நல்லூரே!

மஞ்சன நீராடி மாமயிலோனை
மருவிப் புகழ்பாடி
குஞ்சர மங்கையாட குறமகளுமாட
கலாப மயிலாட
நெஞ்சங்களில் நெடுவேலாட
கோழிக் கொடியாட
கொஞ்சுதமிழ் கோமானுறையும்
திருக்கோயில் நல்லூரே!

தண்டைகளாட கிண்கிணியாட
தையலிருவராட
தொண்டர் குழாமாட தெய்வத்திரு வீதியில்
ஞானச் சித்தர்களாட
கண்களில் நீராட மெய்சிலிர்த்தடியார்
கரமொட்டியாட
வண்ணக் கொடிகளாட வடிவேலாடி
வரும் திருக்கோயில் நல்லூரே!

செந்தமிழ் மணக்கு மூர்
செம்மையருள் சுரக்குமூர்
மந்திர மொலிக்குமூர்
மாதவத்தோர் வாழ்ந்தவு,ர்
முந்தை வினையறுக்குமூர்
முத்தி நெறி காட்டுமூர்
கந்தன் கோயிலுள்ளவு,ர்
காசினி போற்றும் நல்லூரே!

கந்த தியாகராசா கோண்டாவில்.

## உய்ய வழி தருவாய்

தெள்ளு தமிழ் பாட
தேடி வரும் முருகா
வள்ளி மண வாளா
வாழ் வளிக்கு முருகா
புள்ளிமயில் வாகனா
புவனம் காக்கும் முருகா
உள்ள முருகும் அடியார்க்கு
உய்ய வழி தருவாய்

வேலணை பாலா

# மாபெரும் வர்த்தகக் கண்காட்சி
# நேற்று கோலாகலமாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வாண்டுக்கான மாபெரும் வர்த்தகக் கண்காட்சி நேற்றைய தினம காலை 9.00மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் மிகவும் கோலாகலமாக ஆரம்பமாகியது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் இக் கண்காட்சியை சமபிரதாய பூர்வமாக நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், மங்கள விளக்கினை அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி மற்றும் வணிக ஒன்றியத்தின் தலைவர் சொ.வெற்றியரசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

மூன்று தினங்கள் நடைபெறவுள்ள மேற்படி கண்காட்சியில், சுமார் 40ற்கும் மேற்பட்ட தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள உட்பட பல உள்ளூர் உற்பததி நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ் வர்த்தகக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் யாழ்.குடாநாட்டிலுள்ள வணிக நிலையங்கள் மற்றும் வங்கிகளின் முகாமையாளர்கள், வர்த்தக சமூகத்தினர் உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதுதவிர காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்களை குடாநாட்டின் பல பகுதிகளிலுள்ள பொதுமக்கள் பலர் பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-19,5)



## பௌர்ணமி விழா

சாவகச்சேரி பிரதேசசபை- கச்சாய் பொதுநூலக அபிவிருத்திச் சபையின கலை கலாசாரப பிரிவினரால் நடாத்தப்படும 'பௌர்ணமி விழா' நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.1.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் மேல் மாடி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நூலக அபிவிருத்திச் சபைத் தலைவர் கு.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ற)

## கூட்டுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

ஆத்மஜோதி முத்தையா ஞாபகார்த்த விசேட கூட்டுப்பிரார்த்தனை எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00மணிக்கு ஏழாலை ஆத்மஜோதி தியான மண்டபத்தில் சிவசிறி சிவசண்முகவடிவேல தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)

## மலேரியா தாக்கம் குறைந்துள்ளது

(சுதுமலை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் மலேரியா நோயின் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அணமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் அல்லைப்பிட்டி பகுதியில் 12பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டதாகவும் இம் மாதம் இருவர் மாத்திரமே இதனால் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திடீரென இப்பகுதியில் மலேரியாவின் தாக்கம் அதிகரித்ததையடுத்து, சுகாதாரத் திணைக்களத்தின் மலேரியா தடை இயக்கம் நுளம்புகள், பெருகாது தடுக்க இப்பகுதியில் உள்ள வீடுகளிற்கு முழுமையாக மருநது தெளித்தமையே இவ்விதம் நோய் குறைந்தமைக்குக் காரணமாகும். (ற-252)

## திரு வெண்காடான் தேரேறி வருகின்றான்

தலைத் தீவின். திரு விளக்கு
சிர புரத்தின் ஒளி விளக்கு
மண்டை தீ வெனும் அடையான அகல் விளக்கு
அடி முடிபுரியா அண்ட சாரசரத்தின் பெரு விளக்கு
எங்களப்பன், திரு வெண்காடுறை ~சித்தி விநாயகன்
சீர் பெருகு திருவீதி திருவுலா பவனி வர
துங்கக் கரி முகத்தான்
எமைக் காக்க வென்றே தூங்கா விழியுடையான்
ஐந்து கரத்தான் அழிவதனின் பெருநெருப்பை
அணைத்தே எமை அணைத்தான்
திரு வெண்காடான் சித்திரத் தோதனில்
இன்று தேரேறி வருகின்றான்

தீவதனின் தென் புலத்து நின்ற சீர்மாடமெனும்
திரு வெண்காடுறை சித்தி விநாயகன்
சிறுமை போக்கி கயமை; நீக்கி பெருமை சேர்க்க
எங்கள் குருவே நீயாக வழி நடத்து
மூத்தவனே எமைக்காத்து நிற்பவனே பிள்ளையார் அப்பனே
அலை பாயும் மனமோடு; அழிவதனின்~தழம் போடு
ஊரை விட்டூர் தாவி அகதி யென வாழ்ந்தவர்
நாமெல்லாம் நிந்தன் பெருங் கருணைப் பேரருளால்
பத்துடன் சேர் மூன்றாண்டு பாரதனில்
காரிருள் சேர்ந்த குறிச்சி யென
தொய்யா வரமருளும் தொந்தி பெருத்தானும்
மனை வாழ முடியா துமனக் கவலை கொண்டு
தலைத் தீவை தலைமகனும் விட்டகன்றன னென
எண்ண வைத்த இடப் பெயர்வு
நனவான கனவாக திருக்காட்சி தனைக் காட்ட
சித்திரத் தோதனில் இன்று தேரேறி வருகின்றான்.
சுபம்

யாதவகுலசிங்கம்- துவாரகா

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோமன கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கிவருறது.

கடந்த 2002ஆம் ஆண்டு இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின் ஆரம்பிக்கப்பட்ட இபபாடசாலை, ஓலைக் கொட்டகையிலேயே இயங்கி வருகிறது. இது மழைக் காலததில் தாக்குப்பிடிக்க முடியாத நிலையிலுள்ளது.

கடந்த வருடம் நடமாடும் செயலக அதிகாரிகள், திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் இப்பாடசாலையைப புனரமைப்புச் செய்து தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்கப்பட்டது.

எனினும் இன்றுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

எனவே, பாடசாலையைப் புனரமைப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. (ற-35)

## ATHENS 2004
MEDALS

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 28 | 31 | 25 | 84 |
| சீனா | 25 | 17 | 12 | 54 |
| அவுஸ்திரேலியா | 16 | 11 | 16 | 43 |
| ரஷ்யா | 15 | 21 | 24 | 60 |
| ஜப்பான் | 15 | 09 | 10 | 34 |
| ஜேர்மனி | 12 | 13 | 17 | 42 |

# வியாழ மாற்றம்



(நேற்றைய தொடர்ச்சி)

## விருச்சிகம்



15.08.2004 முதல் 28.09.2004 வரை

இது லாபத்து குரு தான், கவலையை விடுங்கள். பண நெருக்கம் படிப்படியே குறைந்து விடும். சகோதர, சகோதரி வகையில் முக்கிய செலவுகள் இருக்குமே தவிர ஆதாயம் இல்லை. அரசியல் முக்கியஸதர்கள் சந்திப்பு உங்கள் சொந்த வேலைகளுக்கு பாதிப்பு தருவதாக இருக்கும் என்பதை கவனப்படுத்த விரும்புகிறேன். கௌரவச செலவுகள் அதிகமாக உள்ள காலமிது. திசா புத்திகள நன்றாக இருபபினா லாடடரி, போட்டி, பந்தயம், விளையாட்டு வகைகளும உங்களுக்கு அனு கூலமாக வந்து விடும். அரசியல், அரசாங்க மனிதர்கள கோபத்திற்கு ஆளாக வேண்டி இருக்கம். உடன் இருப்பவர்கள் உங்களை பேசியே கெடுத்து விடுவர் எச்சரிக்கை. பிரயாணம் திடீரென தடையாகும். புத்திரர், புத்திரியர் வகையில் மருத்துவச் செலவு இ ருக்கிறது. கடைசியில் திருமணம் போன்ற சுப விஷயங்களுக்கு செலவது விருநதுண்பதும உண்டு. கடன் இருக்கும். குரு எப்படியோ பணவரவை செய்து கொண்டு தான் இருப்பான். கணவன் மனைவி உறவு திருபதியாக இருக்கும். திருமணம் காதல தொடர்புக்கு இது ஏற்ற மாதமல்ல. பிரச்சினையில் கொண்டு போய் விட்டுவிடும். உத்தி யோகப் பிரிவின் ஆண், பெண் களுக்கு பதவி உயர்வு என்பது திருப்தியாக இல்லை. அவை உங்கள் எதிர் உள்ளவர்களால் இடை மறிக்கப்படுகின்றன. செயலில் வேகம் காட்டுவது தான் சிறப்பு. லாட் டரி, போட்டி, பந்தயம் வீணான முயற்சியே. அதன் மூலம பலன் இல்லை, பயன் இல்லையென தெரிந்திருந்தும் அலைசசலும்முயற்சியும் உங்களை விட விலலை. பிரயாணம் மிகவும் அவசியமாகும். கணவன் மனைவி உறவு அவ்வளவு திருப்தியாக இருக்காது. குடுமபத்திற்கு நாகரிக பொருள சேர்க்கை, புது உடைகள் வாங்குவது போன்ற நனமைகள் இருக்கும். உங்களுக்கு தொழில் நிமித்தமாக அலைச்சல் இருக்கும் என்பது உண்மை. ஆனால் கெட்ட காலம என்று நினைக்க வேண்டாம். முடிவில் தொழிலில் முட்டுக்கட்டையோ, முதலில இருந்தது போல் இல்லை. பிற்பகுதியில் பெருமைப் படுத்துவதாகவும் மகிழ்ச்சிக்கும் உரியதாக இருக்கும். அயல் நாட்டுக் கடிதத் தொடர்பு சொத்து வாங்குவது போன்ற நன்மையைப் பெறுவர். குழந்தைகள் ஆரோக்கியம் போகப் போக தெளிவடைந்து வரும். கடன் வழக்கு பாதிப்புகள் மாதம் மத்திமப பகுதியில் இருந்தது போல் கடைசியில் இல்லை.

**அதிர்ஷ்ட எண்கள் : 2,7,9**

**அனுகூலத திக்குகள் : தெற்கு, கிழக்கு**

**28.09.2004 முதல் 11.11.2004வரை**

முன்பு தீங்கு செய்தவரே இப்போது நெருங்கி வருகின்றனர். அவர்கள் மூலம் நன்மையுண்டு. சகோதரன், சகோதரி வகை முன்னேற்றம். குறிப்பிடத தகககது. குழந் தைகள் நிலை மகிழ்ச்சிக்குரியது. மேலும் உங்கள் கூட்டாளிகளின் துரிதப் போகக்கு மன மகிழ்ச்சியை உண் டாக்கும். சிலர் அயல் நாட்டு பிரயாணத்தை மேற்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. இப்போது எததனை அவசர பிரசசினைகள் இருந்த போதிலும் அவைகளை உடனுக்குடன் முடித்து வெறறி காண்பீர்கள். உறவும் நட்பும் இப்போதும் நெருங்கி இருக்கும். காதல் கல்யாண சம்பந்தமான கடிதப் போக்குவரத்து வெகு சிறப்பாக இருக்கும். புதியதாக உத்தியோகத்திற்கு மனு போடுவது குறிப் பிடத்தககது. கடன் வழக்கு இந்த வகைகள் கட்டுபபட்டே இருக்கும். பூர்வீக சொதது வகையில சில மாற்றங்கள் அவசியம் அவசரமாகும். குடும்பத்தில் ஏற்படும் செலவுகள் அவசியமானதே. கணவன் மனைவி உறவில் இதமான போக்கு தொடர்ந்து இருக்கிறது. காதல் கடிதப் போக்கு வரவு இருக்கும். சிலர் நாகரிக வாகனத்தைப் புதுப்பித்தல் அல்லது வாங்குவதும் உண்டாகும். உங்கள் கூட்டாளிகளை திருப்தி செய்ய பொய் பேச வேண்டி இருக்கும். தூரத்துக் கடிதம வருவது தொழில் வழிக்கு நல்லது. போட்டி, பந்தயம், விளையாட்டு இவைகள் சிறு சிறு ஆதாயத்தை கொடுத்துக் கொண்டு தான் இருக்கும். நெருக்கடி இல்லையென்றாலும குடும்பத்தின் அவசிய அவசர செலவுகள இருந்து கொண்டே இருக்கும். கணவன் மனைவி உறவில் எவ்வித குறையும் இல்லை. உறவு மீண்டும் தொடரும் காலம் இது. காதல் கல்யாணம் சம்பந்தமான முயற்சிகள் கடிதம் அளவில் நல்ல சூழ் நிலையை உருவாக்கும். பிரயாணம் உங் களுக்கு பெருமை அளிப்பதாகவே இருக்கும். வரவேண்டிய பணதநில ஒரு பகுதி வந்து சேருவதால் முக்கிய காரியங்களை நிறைவேற்றுவதில் தடை ஏதுமில்லை. உறவினர் இல்லம் போய் வருதல், விருந்து மகிழ்ச்சியும் இருக்கிறது. குழந்தைகள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனம் மிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

**அதிர்ஷ்ட எண்கள் :7,2,9**

**அனுகூலத் திக்குகள் : தெற்கு, தென்மேற்கு**

**11.11.2004 முதல் 26.12.2004வரை**

குடும்பத்தில் சுப செலவுகள் உணடாக்குதல். ஸ்தல பிரயாணம், பாராட்டுகளும் உண்டாக்கும். பழைய நண்பர்கள் சிலரை சந்திப்பீர்கள். புதிய தொழில் திட்டஙகளும் உருவாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் சிறப்பாகவே இருக்கும். குழந்தை தேக ஆரோக்கியம் போனறவை கல்வி போன்றவையும் நன்றாக இருக்கிறது. கடன் வழக்கு வகைகள் கட்டுபபட்டே இருக்கின்றன. சிலர் அயல்நாட்டு பிரயாணத்தை மேற்கொள்வதும் இருக்கும். 2005ல் உங்களுக்கு பெரிய பெரிய திட்டங்கள் இருக்கின்றன. குடும்பத்திற்கு நாகாிகப பொருட்கள் வாங்குவதும், சிலர் மனை வாங்குவதையும் உண்டாக்கும். தேக ஆரோக்கியத்தில் தனி கவனம் செலுத்த வேண்டும். புத்திரன் அல்லது புத்திரியின் சுப மணம் முடிவாகுப் காலமிது. கடன்வகை கௌரவத்தை குறைக்காது. வழக்கு தள்ளிக்கொண்டே போய்விடம். கடந்து போன காரியம் குறித்து வாக்கு வாதம் உண்டாகும். குடும்ப மனிதர்களுடன் பழகுவதில் திருப்தி இருக்காது. அன்பை வளர்க்க நீங்கள் உறவினர் இல்லம் போய் வருதல் முக்கிய காரியங்களையும் எழுத்து மூலியத்தில் செய்து நன்மை பெறுவதும் இருக்கும். இது இடைக்கால நிவாரணமே. கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். தொழில் கூட்டு மனிதர்கள் உங்களை விட்டு விலகி நிற்பது தான் மனச் சலனத்தைக் கொடுக்கும். பெண்களுக்கு அவச் சொற்களை உண்டாக்கும் என்பதால் அவ்வழி எச்சரிக்கை தேவை. திருமணம் போன்ற சுப விசேடங்களில் கலந்து கொள்வது, விருந்து உண்பது உண்டாகும். குடும்பத்திலும் இப்படிப்பட்ட செலவுகளும் அடிக்கடி இருக்கும். உடன் இருந தவர்களே கூறும் கடுஞ்சொற்களால் சில சமயம் கசப்பான சூழ்நிலை உருவாகி மறையும். கடிதம் எழுதுவது, மற்றவருக்கு சிபாரிசு செய்வது, கையெழுதது போடுவது பொன்ற வகைகளில் கவனம் செலுத்த வேண்டும். சொத்து விஷயம், சகோதர, சகோதரி வகையில் நீங்கள் இப்பொது பலம் குறைந்தவர்கள் தான். குரு தனக்குரிய சந்திரன் சாரத்தில் நிற்பதால் அரசாங்க உயர்மட்ட மனிதாகளால் கௌரவம் போன்ற நன்மைகளும் இருக்கின்றன. ஆனால் உங்கள் பழைய இடத்தை பிடிக்க முடியவில்லை. போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகையில் ஈடுபாடு பயனில்லை. பெருமை பேசி காலம் கழிப்பதை விடுத்து செயலில் இறங்கவும். அவசியமற்ற பிரயாணமும் இப்போது இருக்கிறது. ஆகவே, துரித கெதியில் இயங்கும் நிலை கொள்ளுங்கள். உத்தியோகத்துறை ஆண், பெண்களுக்கு உயர் வட்டார மனிதர்களின் ஆதரவு சிறபபாக அமைந்திருப்பதால் அவர்களை நன்கு பயன் படுத்திக் கொள்ளும் நேரமிது. அதே நேரம் மேல் நிலையில் உள்ளவர்களுக்கு கீழ் நிலை ஊழியரின் ஆதரவோ, அனுசரணையொ குறைவுதான். கணவன் மனைவி உறவு கண்ணியமாக இருக்கும். புத்திரர், புத்திரியர்கள் ஆரோக்கியம் கல்வியின் நிலை திருப்தியாக இருககின்றன. அவை சித்திரை நட்சத்திரம் 2 பாதங்களுக்குள் பிறந்திருந்தால் அபார நன்மைகளை எதிர்பார்க்கலாம். உத்திரம் என்றாலும் சிக்கலான போக்கு இருக்கும். அஸ்த்தம் நடுத்தர பலன்களே கிட்டும்.

**அதிர்ஷ்ட எண்கள் :5,7,9**

**அனுகூலத் திக்கு : கிழக்கு, வடமேற்கு**

**26.12.2004முதல் 11.02.2005 வரை**

தொழில் சம்பந்தமான வகையில் இருந்து வந்த வழக்கு இதர சிக்கல்களையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் காலம் இது. கிரகங்களுக்கு சார பலம் உங்களுக்கு அனுகூலமாக இருப்பதால் நீங்கள் நினைததபடியே அவர்களும் இணங்கி வந்து விடுவர். எழுத்து மூலம் நன்மை ஒப்பந்தம் பொன்றவைகளும் திருப்தியானதே. சிலர் அயல் நாடு செல்வது அவசர பிரச்சினையாக அரசாங்க மனிதர்களை சந்திப்பதும் உண்டாகும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கிறது. சகோதர சகோதரி வகையில் அவசர செலவுகள இருக்கின்றன. உங்களுக்கும் சதள பாதிப்பு பல நோய் போன்றவைகளும் தோன்றக்கூடிம். தொழில் வகையில் பழைய கணக்குகளை கவனிக்க வேண்டியது அவசியமாகும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு இடமாற்றம், இலாகா மாற்றம் சம்பந்தமாக உத்தரவுகளும் வரும். கௌரவச் செலவுகளும் இருக்கின்றன. தெற்கு, தென்மேற்கு திக்கு பிரயாணம் மிகவும் அவசியமாகும். உறவினர் வருகை, விருந்து, குடுமபத்திற்கு நாகாிகப் பொருள் சோக்கை புது உடைகள் வாங்குவது போன்ற நன்மைகள் இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு இவைகள் ஆதாயம் மிககதே. உங்கள் அவசர தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகி வரும். மற்றவர் சொலவதை கேட்பதை விட சுயமாக நடந்தால் காரிய சாதனைகள் உண்டு. உமக்கு எந்தவித பூதிப்பும் செய்பவரல்ல. மனதை ஒரு நிலைப்படுத்த விடாதவர்களாக்கும். மறதி அதிகமாக இருக்கும். செய்தவை களுக்கு இப்போது பதில் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. பழைய நண்பர்களை சந்திப்பதும எழுத்து மூலம் தொடர்பும் இப்போது துரிதமடையும். சூரியனும் புதனும் பண விசயத்தில் உங்களுக்கு பற்றாக் குறை உண்டாக்காது. என்றாலும் முன்போல் அல்ல. பிடிப்பாகத் தான் இருக்கும். குடும்ப பிரச்சினைகளை குறித்த படி தீர்த்து வைபபீர்கள். அதில் சந்தேகமில்லை. கலைக்காரர்கள் சுக்கிரன் சார குரு என்பதால் கலை புகழ் மிக்கவர் பெரிய மனிதர்களின் பாராட்டுப் பெறுவீர் என்பதோடு அவர்களால தொழில் தன வகையிலும் முன்னேற்றம் பெறும் காலமிது.

கொடுக்கல் வாங்கலில் புதிய திருபத்தைப் பெறலாம். வரவேண்டிய பணம் சற்று காலம கடந்து வந்தாலும் நல்ல நேரத்திற்கு பயன்படுத்துவதாக இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு நிகழ்ச்சிகள் திருப்தியளிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எப்படி இருந்தாலும் பிரயாணச் செலவு, கௌரவச் செலவு உங்களை விடாது. உத்தியோகப் பிரிவு மனிதர்களுக்கு பதவியில் மாற்றம், பிறரால் பாராடடு, இடமாறுதல் உண்டு. சிலருக்கு திருமணம் போன்ற சுபம் ஏற்றலும் உண்டாகும். புது உடை விருந்தும் கிட்டும். கண் விழிததல் அடிக்கடி இருக்கும். மேல் மட்ட மனிதர்கள் மிகவும் நல்ல சூழ் நிலையில் இருக்கின் றனர். குடும்ப மேன்மையுண்டு. புது கணக்கு போடுதல்,.ஒப்பந்த நன்மையும் இப்போது இடம் பெறும்.

**அதிர்ஷ்ட எண்கள் :3,5,9**

**அனுகூலத் திக்கு : தென் கிழக்கு**

**11.02.2005முதல 24.03.2005 வரை**

உடனுக்குடன் பிரயாணம் உள்ளத் தெளிவை உண்டாக்கும். சில சமயம் போட்டி, பந்தயம், விளையாட்டுகள் இந்த வகைகள் அபார நன்மைகளைச் செய்யும். அரசியல் மனிதர்கள் மூலம் கணக்கு வழக்குகளில் இருந்த சிக்கலைப் போக்கி விடுவீர்கள். நாகரீகப் பொருள் சேர்ககை, குடி இருப்பு இடமாற்றம் போன்ற நன்மைகளும் இருக்கின்றன. நீங்கள் வெகு தூர பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டி இருக்கலாம். கணவன் மனைவி உறவு சீரமைந்ததாகவே இருக்கும். புது உடைகள் சேர்ககையும் பெண்களுக்கு கல் ஆபரண சேர்ககையும் உண்டாகும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு அலுவலகப் போக்கு சுமுகமாக இருக்கும். உடனிருப்பவர்களும் திருப்தியான போக்கில் இயக்கம் கொள்வர். மாணவ மாணவிகளுக்கு பாராட்டுப் பததிரங்களும், விருதுகளும் வரும். உத்தியோகத் துறையினருக்கு பதவி உயர்வு, இடமாற்றம் கூட இருக்கிறது.சிலர் குடும்ப உறவில் நடக்கும் விருந்து வேடிக்கைகளில் கலந்து கொள்வதும உண்டாகும். வெளி வட்டார மனிதாகள் உங்கள் தொழில் வகைக்கு எழுத்து மூலம் நன்மையைத் தேடித்தரக் கூடியவாகளே. [illegible] பெண்களுக்கு புது நகைகள் [illegible] ஆபரண சேர்க்கையும் உண்டா[illegible] முன்பு இழந்த பூர்வீகட் பொருட்களை திரும்ப வாங்கவதும் உண்டாகும்.

கிரக அமைப்பு மிகவும் தெளிவாக இருக்கிறன. பெண்கள் வகையில் உளள சொத்து வகையை ஏற்று நடத்துவது, அல்லது பெறுவதும் சிலருக்கு குறிப்பாக நல்லவையே. குழந்தைகள் வகை ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் வைக்க வேண்டும். சிறிது தள்ளிப் போனது உங்கள் ஒப்பந்தம், சீதள பாதிப்பு மருத்துவச் செலவுகளும் இடம் பெறும். இப்போது எழுத்து வகை யில் மனத் திருப்தியை உண்டாக்கும். அவை விகித அனுகூலமே. கணவன் மனவைி உறவு இனிமையாக இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண் களுக்கு சூழ் நிலையில் பிடிப்பாக இருக் கும் என்றாலும் உறவு நட்பு இந்த வகை யும் வெளிவட்டாரப் போக்கும் மனதிற் குத் திருப்தியைக் கொடுக்கும். தூரத்து மனிதர்கள் ஒத்துழைப்பு இனிமையான சூழ் நிலைகளை தோற்றுவிக்கும். சில சமயம் பழைய சிந்தனைகள் இடம் பெறும் என்றாலும் மனச் சலனத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது. செல்வு வருவது போல் இருந்து கடைசிக் கட்டத்தில் மாறுதல் [illegible] விடும். போட்டி, பந்தயம், போன்ற[illegible] ஆதாயம் இருக்கின்றன. [illegible] மனிதர்களின் சந்திப்பு புது நண்[illegible] சேர்க்கும்.கணவன் மனைவ உறவு கவர்ச்சியாகவே இருக்கின்றன. புதிய தொழில் திட்டங்களுக்கு வித்தி டும் மாதமாக அமைந்து விட்டன. அயல் நாட்டவர் பெரிய மனிதர்கள் சந்திப்பு ஏற்படும். கடிதத் தொடர்பு கவர்ச்சியாக இருக்கின்றன. உங்களுக் குக் குருவும சனியும் கூட்டு நன்மைகளை செய்யக் கூடியவர்கள் என்பதை மறவாதீர். செய் தொழிலில் திருப்தியான போக்கு இருபபதை உணரலாம். தன நிலை, குடும்ப நிலையும் இனிமையான போக்கை அதிகரிக்கச் செய்யும்.

**அதிர்ஷ்ட எண்கள் :2,7,9**

**அனுகூலத் திக்குகள் : கிழக்கு, தென்கிழக்கு**

# உங்களுக்கு எப்படி?

(தொடரும்)

# மண்டைதீவு திருவெண்கா

# இரதோற்சவ சிறப்பு

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி




சிவநேயச் செல்வர்காள்!

சைவமும் தமிழும் செழுமையுறும் மண்டை தீவு பதியில் இன்று திருவெண்காட்டு சித்தி விநாயகன் புதிய சித்திரத்தேரில் பவனி வருவது நமக்கெல்லாம் மகிழ்வைத் தருவதாகும். பல்வேறு இன்னல்களை சந்தித்த மண்டை தீவு மக்கள் எத்துணை துன்பம் வந்த போதிலும் திருவெண்காட்டு சித்தி விநாயகன் மீது கொண்ட அளவு கடந்த அன்பை புதிய சித்திரத் தேரின் உருவாக்கம் உணர்த்தி நிற்கின்றது. விநாயகனின் திருவருளும் அடியார்களின் பக்தி பிரவாகமும் சேர்ந்து தேர்த்திருவிழா சிறப்புற நல்லாசி கூறுகின்றேன்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**நல்லை ஆதீனம்**
**நல்லூர்.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர**
**பரமாசார்ய சுவாமிகள்**
**ஆதீன முதல்வர்.**



## சர்வதேச இந்துமத குருபீடாதிபதியின் ஆசிச்செய்தி



13 வருடங்களுக்குப் பின்னர் மண்டைதீவு திருவெண்காட்டு சித்தி விநாயகர் ஆலயத்தில் மஹோற்சவம் நடைபெறுவது இறைவனின் திருவருளேயாம். 13 வருடங்களாக மக்கள் பட்ட துன்பங்கள் விலகி இன்பமயமான சூழ்நிலை தோன்றும் அறிகுறியாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேரில் திருவெண்காட்டு விநாயகன் வலம் வரும் அற்புதக் காட்சி அமைகின்றது.

எத்தனையோ சிரமங்கள் மத்தியிலும் விநாயகனுக்கு புதிய சித்திரத்தேரை நிர்மாணித்த ஆலய அறங்காவலர்களுக்கும் ஊர் மக்களுக்கும் விநாயகனின் திருவருள் கிடைக்கவேண்டி ஆசி கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள்**
**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**

## மஹோற்சவ பிரதம குருவின் அருளாசிச்செ



*இலங்கா தீபத்தின் வட பாலமைந்த ய*
*பாணத்தின் தெற்கே மண்டைதீவு எனும்*
*திருவெண்காடு எனும் புண்ணிய ஷேத்திர*
*வீற்றிருந்து, அடியார்களுக்கு வேண்டுவன*
*ருளும் சித்தி விநாயகப் பெருமானுக்கு இ*
*மக்களினதும் ஆலய தாம பரிபாலகரினதும*
*வாவினால், நீண்ட காலத்திற்கு முன்*
*திருப்பணி ஆரம்பித்து, பலவித இட*
*இன்னல்களுக்கு மத்தியிலும் அத்திருப்பணி தொடர்ந்து எம்பெ*
*திருவருளினால் தாரணவருடம் 27.08.2004 வெள்ளிககிழமை*
*இரதவெள்ளோட்டம் மங்களகரமாக நடை பெற்று*
*இரதாரோகணம் மிகவும் சிறப்பாக இடம் பெறுவதை யிட்*
*பெருமகிழ்வடைகிறோம்.*

*இம்மங்களகரமான வைபவம் இனிது நடைபெற எம்பெ*
*திருப்பாதங்களை பக்தி சிரத்தையுடன் வணங்கி பக்த கோடிக*
*சகல செல்வங்களையும் எமது திருவெண்காட்டு சித்திவிந*
*பெருமான் அருள்வாராக என ஆசி கூறி அமைகிறேன்.*

***"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"***

**சிவாகம கிரியாதத்வநிதி**
**சிவஸ்ரீ. இராம.பாலச்சந்திரகுருக்கள்**

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்
41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

S.P.O. என்ரபிறைசஸ்
இல: 110, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

இ.ச.பேரம்பலம்
சக நிறு
E.S.PERAMPALAM
இல: 50, 52, 54, கஸ்தூரியார் வீ
யாழ்ப்பாணம்.
T.P :
021 22
Fax :

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஹார்ணி காட்வெயர்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ரூபன் புத்தக
605, கே.கே.எஸ்
யாழ்ப்பாணம்

# அரசின் அண்மைக் கால செயற்பாடுகள்

# மீண்டுமோர் யுத்தத்திற்கான ஆயத்தமே

# அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

***அண்மைக்காலமாக இங்கு இடம்பெற்றுவரும் சம்பவங்தள், அரசாங்கமானது போரை நோக்கிச் செல்வதான செய்திகளையே வெளிப்படுத்தி நிற்கிறது என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.***

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் இடம்பெறும் இச்சம்பவங்கள் மக்கள் மத்தியில் பெரும் பீதியினையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

### ஜனாதிபதியின் தந்திரம்

ஜனாதிபதியைப் பொறுத்தவரை போராயத்தம் பற்றிய செயற்பாடுகளில் தான் நேரடியாகப் பங்கு பற்றாமல் தனது அமைச்சர்களையும் படை அதிகாரிகளையும் ஈடுபட வைப்பதே அவரது நோக்கமாகக் காணப்படுகிறது.



இதுபோன்றதொரு நடைமுறை அவரின் தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தின் போதும் ஏற்பட்டிருக்கிறது.

போருக்கான தயாரிப்புக்களில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகின்றது என்பதற்குச் சான்றாக மூன்று காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

### போருக்கான ஆயத்தம்

காயங்கேணிப் பிரதேசத்தில் அண்மையில் படையினர் மேல் இரண்டு சிறு தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இவை பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு இத்தாக்குதல்கள் பற்றிய நம்பகத் தன்மையை அறிவதை விடுத்து, இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சாந்தகொட்டேகொட "யாராவது தாக்கினால் திருப்பித் தாக்குங்கள்" என்ற அறிவிப்பை படைத்தரப்புக்கு விடுத்திருகின்றார்.

போர்நிறுத்த உடன்படிக்கையானது தற்போது அமுலில் இருக்கும் வேளையில், பாதுகாப்பு அமைசசரான ஜனாதிபதி இல்லாத போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தான் இது பற்றிய முடிவுகளை அமைச்சரவையைக் கலந்தாலோசித்து எடுக்கவேண்டும். ஆனால் இந்த நடைமுறையை மீறி இராணுவத்தளபதி உத்தரவு பிறப்பித்துள்ளதானது ஒரு குழப்பமான நிலையையே ஏற்படுத்தியுள்ளது.

தேசநலன்களை முன்னிட்டு நடவடிக்கைகளை இராணுவத்தினர் எடுக்கலாம் என்று ஒப்புநோக்கினாலும் அதேபோன்றதொரு நிலையை விடுதலைப்புலிகளும் செய்ய, தமது உறுப்பினர்கள் யாராவது தாக்கப்பட்டார்ல் அவர்களும் திருப்பித் தாக்க இந்த அறிவிப்பானது வழியேற்படுத்தி நிற்கின்றது.

குறிப்பாக, இராணுவ முகாம்களில் தங்கியிருக்கும் ஆயுததாரிகள், புலனாய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதலிற்குப் புலிகள் பதிலடி கொடுப்பதினால், இராணுவமுகாமையே தாக்க வேண்டிய நிலைக்கு வழிவகுத்துச் செல்லும்.

### க.கா.குழுவுக்கு நெருக்குதல்

போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு, இதுவரை காலமும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை தமது தேவைகளிற்குப் பயன்படுத்த முனைந்த அரசாங்கம் தற்போது கண்காணிப்புக்குழுவுடன் மோதும் நிலைக்குச் சென்றுள்ளது.

கண்காணிப்புக்குழு ஒழுங்காகச் செயலாற்றவில்லை என்ற காரணத்தைக் காட்டி அதனைப் பற்றிய தரக் குறைவான பிரசாரத்தை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

இரு தரப்பாலும் விரும்பியேற்கப்பட்ட கண்காணிப்பாளர்களிற்கு நெருக்குதல் கொடுக்கும் விதமான கருத்துக்களை அப்பட்டமாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சரே வெளியிட்டுள்ளார்.

கண்காணிப்புக் குழுவின் சுயாதீனச் செயற்பாட்டை முடக்கி, தாம் விரும்பும் பாணியில் அதனைச் செயற்பட வைப்பதற்கு அரசு முழு முனைப்புடன் செயலாற்றுகிறது.

கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரை இரண்டு தரப்பினரையும் விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, எடுத்ததற்கெல்லாம் குறை கண்டுபிடித்துக் கொண்டிருக்கக் கூடாது என்ற ரீதியில் அரசினால் கூறப்பட்ட கருத்தானது, அது பக்கச் சார்பான அமைப்பு என்பது போன்ற குற்றச் சாட்டாகவே அமைந்துள்ளது.

### பிரதமரின் மணலாறு விஜயம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திடீரென மணலாறு மாவட்டத்தின் முன்னணிக் காவலரணுக்குச் சென்று பாதுபாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டுள்ளார்.

அரசாங்கம் போரை ஆரம்பிக்கும் மையமாக கிழக்கு மாகாணம் இருந்தாலும், தாங்கள் மீண்டும் போரை ஆரம்பிக்கும் போது விடுதலைப் புலிகள் மறுபுறமாக மணலூறை விடுவிக்கலாம்.

அத்துடன், மதவாச்சி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களின் பெரும் பகுதிகளைச் சூனியப்பிரதேசமாக்கி அப் பகுதிகளை போருக்கான மையப் பிரதேசமாக அவர்கள் மாற்றலாம் என்ற காரணத்தினாலேயே மணலாற்றுப் பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.



விடுதலைப் புலிகள் 2000 ஆம் ஆண்டு மணலாற்றுப் பிரதேசத்தின் பெரும்பகுதியை மீட்டபோது மதவாச்சி மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களின் எல்லைப் புறத்திலிருந்த சுமார் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறினர்.

இப்போதும் அதே மன நிலையில இருப்பதுவே, இவ்வாறான சம்பவம் மீண்டும் இடம்பெற்றால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேறுவார்கள் என்ற அரசாங்கத்தின் எதிர்பார்ப்பிற்குக் காரணமாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்கள் இலங்கை அரசு போரை நோக்கியே நகர்கிறது என்ற எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸின் குற்றச்சாட்டைத் தெளிவாக உறுதிப்படுத்தி நிற் கின்றது என அரசியல் அவதானி கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். (ற-க,121)

---

## யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட

# அனைத்து பட்டதாரிகளுக்கும் 31ஆம் திகதிக்குள் நியமனங்கள்

(யாழ்ப்பாணம்)

அரச துறை வேலைவாய்ப்புக்காக யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான பயிலுநர் நியமனங்கள் அனைத்தும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படவுள்ளன.

இது விடயம் குறித்து சம்பந்தப்பட்ட பட்டதாரிகளுக்கு அறியத் தரும் வகையில், யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில, நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் பெருந்தொகையான பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான பயிற்சிகளுக்குத் தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன. முற்கூட்டியே பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு அமைவாக இத்தெரிவுகள் இடம்பெற்றாலும், எம்மைப் பொறுத்தமட்டில் இத்தெரிவானது உளளூர் அரச செயலகங்களினால் பூரணப்படுத்தப்பட்டமையினாலேயே பட்டதாரிகளுக்கான பயிலுநர் நியமனங்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

எமது சங்கமானது, மூப்பு அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவேண்டும் எனவும், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் அழுத்தம் கொடுத்திருந்தது. பட்டதாரிகள் தொடர்பான தரவுகளையும் தகவல்களையும் எமது சங்கமானது ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர், தொழில் அமைச்சர் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உட்பட யாழ் அரச அதிபருக்கும் வழங்கப்பட்டன.

மேலதிகமாக யாழ்.செயலகம் முன்பாகக் கடந்த மாதம் 26 ஆம் திகதி அடையாள மறியல் போராட்டத்தையும் இச் சங்கம் நடத்தியது. அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், நிதி அமைச்சருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி அனைத்துப் பல்கலைக்கழக பட்டதாரிகளிற்கும் பயிலுநர் நியமனங்கள் வழங்கப்படும் என்ற உறுதிமொழியைப் பெற்றுத் தந்தனர்.

இது குறித்து யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்ட போது அனைத்துப் பட்டதாரிகளிற்கும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பயிலுநர் நியமனங்கள் வழங்கப்படும் என்பதாக ஜனாதிபதி செயலக அறிக்கையினைச் சுட்டிக்காட்டி உறுதிப்படுத்தினார்.

எனவே, இதனை அனைத்துப் பட்டதாரிகளின் கவனத்திற்கும் கொண்டு வருகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற)

---

# தொழில் இழக்கும் ஒருவருக்கு

# 4 வருட காலத்திற்கு சம்பளம்

(கொழும்பு)

தொழில் முடிவுறுத்தும் சட்டத்தின் கீழ், தொழிலை இழக்கும் ஒருவருக்கு 48மாத காலத்திற்கான சம்பளத்தை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொழில் முடிவுறுத்தும் சட்டத்தின் கீழான புதிய நட்ட ஈட்டுப் பட்டியல், மானியக் காப்புறுதி முறை ஆகியன் எதிர்வரும் செப்டெம்பர் மாத இறுதிக்குள் நடைமுறைக்கு வரும் எனத் தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் இது தொடர்பான தங்கள் கருத்துக்களை எழுத்து மூலம் வழங்குவதற்கான கால அவகாசம் அடுத்த மாதம் 10ஆம்திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த நட்ட ஈட்டுப்பட்டியல் பல்வேறு சிக்கல்களின் காரணமாக தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

முன்னர் நடைமுறையில் இருந்த நட்ட ஈட்டுப்பட்டியலுக்கு அமைய தொழில் முடிவுறுத்தும் சட்டத்தின் கீழ், தொழில் வாய்ப்பிழக்கும் ஒருவருக்கு அதிக பட்சம் முப்பத்தியொன்றரை மாத சம்பளம் நட்ட ஈடாகக் கிடைக்கும்.

இருப்பினும், புதிய நட்டஈட்டுப் பட்டியலுக்கு அமைய அதிகபட்சமாக 48 மாத சம்பளம் நட்டஈடாக வழங்கப்படவிருக்கிறது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற-க,121)

---

# நிவாரண மீளாய்வை நிறுத்துமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணத்தைப் படிப்படியாக நிறுத்தித் தற்போது நிவாரணம் பெறுவோரில் 50 சதவீதமானோருக்கு மட்டுமே நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஆனால், யாழ்.மாவட்டத்தில் 25 ஆயிரம் ரூபா மீள் குடியமர்வுக் கொடுப்பனவை பெற்ற குடும்பங்களுக்கு மட்டுமே இந் நிவாரணம் படிப்படியாக நிறுத்தப்படும் எனவும், ஏனையோருக்குத் தொடர்ந்தும நிவாரணம் வழங்கப்படும் எனவும் யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் நிவாரணத்தை நிறுத்தும் நோக்குடன், துரித மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மீளாய்வு நடைபெறும் இடங்களில் உலர் உணவு நிவாரணம் பெற்றுவரும் பொதுமக்கள் தமது ஆட்சேபத்தினையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் நிவாரணம் நிறுத்தப்பட்ட பொது மக்களை அணி திரட்டி யாழ்.செயலகம் முன்பாக போராட்டங்களில் ஈடுபடவேண்டி வரும் . எனவே குடாநாட்டில் நடைபெற்று வரும் நிவாரண மீளாய்வு நடவடிக்கைகளை உடன் நிறுத்தி அனைவருக்கும் நிவாரணம் வழங்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொது அமைப்புக்கள் பலவும் கோரிக்கை விடுத்துள்ளன. (ற-45)

# வாசகர் மத்தியில் நல்வரவேற்புப் பெற்ற 'முகங்களும் மூடிகளும்' சிறுகதைத் தொகுதி

தனது நாவல்கள், சிறுகதைகள், விஞ்ஞானக் கதைகள், நாடகங்கள் என்பவற்றினூடாக

**நூல் :- முகங்களும் மூடிகளும் (சிறுகதைத்தொகுதி)**
**ஆசிரியர் :- கோகிலா மகேந்திரன்**
**விலை :- 200 ரூபா**

ஈழத்து நவீன இலக்கிய உலகில் தனிக் கவனத்தைப் பெற்றுத் திகழ்பவர் கோகிலா மகேந்திரன் அவரது ஆளுமையின் மற்றொரு வெளிப்பாடாக 'முகங்களும் மூடி




களும்' என்னும் சிறுகதைத்தொகுதி அண்மையில் வெளிவந்துள்ளது. தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் வெளியீடான இத் தொகுதியில் 18 கதைகள் உள் ளன. அவை 1999 ஆம் ஆண்டுக்கும் 2003 ஆம் ஆண்டுக்கும் இடைப் பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்டவை.

வழமையாகவே தனது கதைகளுள் அதிகமானவற்றை உளவியல் தளத்திலும் பெண்ணியத் தளத்திலும் நின்று எழுதிவருபவர் கோகிலா மகேந்திரன். அந்த வகையிலே இத்தொகுதியில் உள்ள கதைகளுள் பெரும்பாலானவையும் உளவியல் தளத்தில் நின்றும் எழுதப்பட்டுள்ளன.

சமூகச் சீரழிவுகளைச் சுட்டிக் காட்டும் வகையிலும், போராட்ட சூழல், பொருளாதாரத்தடை இடப் பெயர்வின் சோக அனுபவங்கள் என்பவனவற்றை எடுத்துக்காட்டும் வகையிலும் அமைந்த கதைகளுள் பல இத்தொகுதியிலுள்ளன. ஆனால் இக்கதைகளுங் கூட உளவியலடிப்படையிலான மனித நேயத்தளத்தின் பின்னணியிலேயே எழுதப்பட்டுள்ளமை கவனிக்கற் பாலதாகும். சமகாலத்தில் முனைப்

## திறனாய்வுக்களம்

புற்று நிற்கும் பல்வேறுபட்ட சீரழிவுகளை, ஏமாற்றுக்களை, போலித் தனங்களை அவற்றின் அடிப்படையில் எழும் பிரச்சினைகளை ஆசிரியர் கதைகளிலே ஆர்ப்பாட்டமின்றி எடுத்துக்காட்டுகிறார். 'ஏ' ஒன்பது பாதையில் மோட்டார் ஊர்திச்சாரதிகள் சிலரால் மக்கள் ஏமாற்றப்படுதல், தனியார் வான் ஊர்திகளில் பயணம் செய்கையில் மக்கள் அனுபவிக்க நேரும் அல்லல்கள், மருந்து தெளித்து அம்மருந்தின் செறிவு நீங்க முன் காய்கறிகளை விற்பனை செய்யும் பொறுப்பற்ற தன்மை முதலான மிகச்சிறிய விடயங்களைக் கூட அழகாகக் கதைகளாக்கியுள்ளார்.

அதேபோலவே போர்ச்சூழலின் நிர்ப்பந்தத்தால் இடம்பெயர்ந்து, அகதி என்னும் நிலைக்குள்ளாகி அல்லலுறும் வாழ்க்கை அனுபவங்களையும் உயிரோட்டமாக கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஈழத்தின் சந்தர்ப்பவாத அரசியல போக்கு கட்டவிழ்த்து விட்ட இராணுவ அடக்குமுறைக்கு எதிராக ஆயுதம் ஏந்திப்போராடும் போராளிகளின் தியாகம், போராற்றல், மனவுறுதி, சமூகப்பொறுப் புணர்வு என்பனவுங் கூட கதைகளில் உணர்வு பூர்வமாகப் பதிவு செய் யப்பட்டுள்ளன. போராளிகளின் தியாகங்கள் புனிதமானவை, அவை ஆத்மார்த்தமாக மதிக்கப்படவேண டும் அல்லாமல் வெறும் பகட்டான போலித்தன்மை நிறைந்த செயற் பாடுகளால் அவர்களின் தியாகத் தைக் கொச்சைப்படுத்தலாகாது என்ற கருத்தைக் கதைகளில் அவர் ஆழமாக வலியுறுத்தியுள்ளார்.

மென்மையான மன உணர்வுகளையும் அகமன உளைச்சல் களையும் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களையும் மிகவும் சிறப்பாக அவர் கதைகளில் கொணர்ந்துள்ளார். பெண்ணியம் சார்ந்த கருத்துநிலை 'பெண்பனை' என்ற கதையில் நேரடியாக தர்க்க ரீதியாகத் தெளிவுபடுத்தப்படும். பெண்ணியம் பற்றிய ஆழமான புரிதல் கொண்டவர்; அதுபற்றி நிறையவே பேசியும் எழுதியும் வருபவர் என்ற வகையில் அத்தகைய பெண்ணியம் சார் சிந்தனைகள் அவர் கதைகளில் இயல்பாகவே வந்து பொருந்துகின்றன.

கதைப் பின்னலில் பல்வேறுபட்ட புதிய உத்திமுறைகளைக் கையாண்டுள்ளார் கதை ஆசிரியர். இத்தொகுதியிலுள்ள பெரும்பாலான கதைகள் தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்ற மரபு நிலைப்பட்ட சிறுகதையமைப்பில் அமைந்துவந்த போதும் எடுத்துக் கொண்ட கதைப் பொருளுககு ஏற்ப சிலவிடங்களில் சிறுகதை அமைப்பு முறையில் அல்லது கதை சொல்லுந் திறனில் அவர் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமை கவனிக்கத்தக்கதொன்றாகும்.

புரிந்து கொள்வதற்கு மிக எளிமையான மொழிநடை சிறிய வசனங்கள் சுட்டிப்பாக வரும் உரையாடல்கள் என்பன இக்கதைகளுக்குக் கட்டிறுக்கத்தைப் பெற்றுத் தந்துள்ளன. இயன்ற அளவுக்கு ஆங்கிலச் சொற்களைக் கலப்பதைத் தவிர்த்து தூய தமிழ்ச் சொற்களை ஆசிரியர் பயன்படுத்த முயன்றுள்ளார். அந்தவகையில் பல கதைகளில் விஞ்ஞான உளவியல் கலைச் சொற்கள் பயின்று வந்துள்ளன. பாத்திர வார்ப்பிலும் ஆசிரியர் அதிக கவனத்தை செலுத்தியுள்ளார். கதைகளில் அறிமுகமாகும் மாந்தர்கள் அவர்களுக்கேயுரிய இயல்பான பண்புகளுடன் படைக்கப்பட்டுள்ளார்கள்.

ஒட்டு மொத்தமாக நோக்குகின்ற போது கோகிலா மகேந்திரனின் இச் சிறுகதைத்தொகுதி அவரது படைப்பாளுமையின் மற்றோர் பரிணாமமாக அமைந்துள்ளது. இத்தொகுதியிலுள்ள கதைகள்-வழமையாக ஆசிரியர் எழுதிவரும் உளவியல் தளத்தில் நின்றும் பெண்ணியத்தளத்தில் நின்றும் எழுந்தனவே. எனினும் வாசகர்களுக்குப் புதிய அனுபவத்தைத் தரவல்லவை. கதையாக்கத்தில் உருவ ரீதியாகவும் உள்ளடக்க ரீதியாகவும் ஆசிரியர் கையாண்டுள்ள புதிய உத்திகள் எளிமையான எடுத்துரைப்பு முறைகள் என்பன இத்தொகுதிக்குத் தனிக்கவனிப்பைப் பெற்றுத் தந்துள்ளன. அந்த வகையில் இத்தொகுதி வாசகர் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.□

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
*விரிவுரையாளர்*
*தமிழ்த்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு விரிவுரையாளர் மற்றும் உதவி விரிவுரையாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை இலங்கை உயர்தொழில் நுட்ப நிறுவனம் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில முதலாம் அல்லது இரண்டாம் தரத்தில் பட்டதாரிப்பட்டம் பெற்றிருப்பதுடன் 5 ஆண்டுக்குக் குறையாத தொழில் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். உதவி விரிவுரையாளர் பதவிக்கு தொழில் அனுபவம் கோரப்படவில்லை.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை இலங்கை உயர்தொழில் நுட்ப நிறுவனம் -98, வாட்பிளேஸ், கொழும்பு-07 என்ற முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவத்தின் மாதிரியை யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பார்வையிடலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-க)

## தலைநகர் கொழும்பில் புலிகளின் பிஸ்ரல் குழு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் 22 பிஸ்ரல் குழு உறுப்பினர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான தாக்குதல் அணியினர் கொழும்பில் ஊடுருவியுள்ளதாக விசேட அதிரடிப்படையினரின் உதவி அத்தியட்சகர் நிமால்லெபகே தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை விசேட அதிரடிப்படை தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கும் முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் இராணுவ புலனாய்வுத் துறை அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கிலேயே விடுதலைப் புலிகளின் விசேட அணி கொழும்பிற்கு ஊடுருவியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

## அரசு தடுத்தும் அத்துமீறி சென்று ஈராக்கில் வேலைதேடும் இந்தியர்

ஈராக்கிற்கு செல்வதைத் தவிர்த்திடுங்கள் என்று மத்திய வெளியுறவுத்துறை காட்டுக்கத்த லாகக் கத்தினாலும், அதை நம்மவர்கள் பொருட்படுத்துவதாகவே இல்லை.

ஈராககிற்கு இந்தியர்கள் வேலை தேடிச் செல்வது தொடர்கிறது. ஈராக்கில் வேலை செய்யும் இந்திய லொறி சாரதிகள் மூவரை தீவிரவாதிகள் கடத்தி வைத்திருப்பதால், இந்தியர்கள் யாரும் ஈராக்கில் பணிபுரியவேண்டாம் என்று வெளியுறவுத்துறை எச்சரித்துள்ளது.


ஆனால் அதையும் மீறி வேலை கிடைத்தால் போதும், அதிக பணம் கிடைத்தால் போதும் என்று எண்ணும் இந்தியர்கள், வளைகுடா நாடான யு.ஏ.இ., மூலம் ஈராக் சென்று விடுகின்றனர்.

இங்கிருந்து நேரடியாக ஈராக் செல்வது இயலாது என்பதால், யு.ஏ.இ., சென்று அங்கிருந்து ஈராக் செல்கின்றனர். உல்லாசப் பிரயாண விசா மூலம் யு.ஏ.இ., சென்று ஈராக்கைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனம் ஏதாவது ஒன்றில் வேலைக்கு அமர்ந்து அதன் மூலம் ஈராக் சென்று விடுகின்றனர்.

இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது கல்ப் நியூஸ் பத்திரிகை. இந்த விதத்தில் ஈராக் சென்றுள்ள சிலரைக் கேட்ட போது, பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கெல்லாம் நாங்கள் பயப்படமாட்டோம். எங்களுக்கு வேலை வேண்டும். அவ்வளவு தான்! என்று கூறியுள்ளனர்.

இதுவரை 5 ஆயிரம் இந்தியர்கள் ஈராக் சென்றுள்ளனர்.

(து,யே)






கும்பகோணத்தில் 94 குழந்தைகள் உயிரிழக்கக் காரணமான பள்ளித்தீ விபத்தில் பாதிக்கப்பட்ட பெற்றோர்களையும், குழந்தைகளையும் சந்தித்து ஆறுதல் கூறுகிறார் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம்.

## இந்தியச் செய்திகள்

### வேளாங்கண்ணி பேராலய விழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

நாகப்பட்டினம் வேளாங்கண்ணி பேராலய ஆண்டுப் பெருவிழா ஆகஸ்ட் 29-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அன்னை மரியாள் காட்சி தந்த வேளாங்கண்ணி திருத்தலத்தில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி செப்ரெம்பர் 8 ஆம் திகதி வரை நடைபெறும். 450 ஆண்டுகளுக்கு முன்பு, வங்கக் கடலில் ஏற்பட்ட கடும் சூறாவளியில் போர்த்துக்கீசர்களின் பாய்மர வணிகக் கப்பல் சிக்கிக் கொணடது. இறைவனை இறைஞ்சிய கப்பல மாலுமிகள் முன் அன்னை மரியாள் தோன்றி அவர்களையும் கப்பலையும் பத்திரமாகக் கரைசேர்த்தார். அவர்கள கரைசேர்ந்த நாள் அன்னை மரியாளின் பிறந்த நாளான செப்ரெம்பர் 8. இதனைக் கொண்டாடும் வகையில் வேளாங்கண்ணியில் ஆண்டுதோரும் ஓகஸ்ட் 29 தொடங்கி செப்ரெம்பர் 8 வரை ஆண்டுப் பெருவிழா கொண்டாடப்படுகிறது. (து)




வளைகுடா ஒத்துழைப்புக் கவுன்சில் (ஜி.சி.சி) நாடுகளுடனான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையில் இந்திய வர்த்தக அமைச்சர் கமல்நாத்தும், குவைத் வெளியுறவு அமைச்சர் ஷேக் டாக்டர் முகமது அல்-சபா, அல்-சலேம், எல்-சபாவும் டில்லியில் நேற்று முன்தினம் கையெழுத்து இட்டார்கள்.

# காடு சித்திவிநாயகர் ஆலய

# பு மலர் 28.08.2004




## ஆலய வரலாறு



மண்டைதீவின் மையப் பகுதியில் அமைந்துள்ள திருவெண்காடு எனும குறிச்சி அக்காலத்தில் பற்றைக ளும், திருக்கொனறை, வேம்பு முதலிய மரங் களும அடர்ந்த காட்டுப் பகுதியாகத் திகழ்ந்தது. இக்காட்டில் ஓர் பெரிய ஆல விருட்ஷமும் காணப்பட்டது. இக் கிராமத்தின் வட பகுதியில வசித்த மக்கள் தென்பகுதிக்கு இக்காட்டினூடாகவே சென்று வநதார்கள். அவர்கள் சென்ற இப்பாதை அந்த ஆலவிருட்ஷத்தின் அருகாமையில் அமைந்திருந்தது.

ஒருநாள் மாலை நேரம் ஐயம்பிள்ளை உடையார் இப்பாதை வழியாகச் சென்று அவ்வால விருட்ஷத்தைக் கடந்து கொண்டிருக்கையில், தன்னை பின் பக்கத்தினால் ஏதோ ஒன்று பிடித்து இழுப்பது போன்ற பிரமை அவருக்கு ஏற்பட்டது. அவர் திணுக்குற்றுத் திரும்பிப்பார்த்தபோது ஆல விருட்ஷத்தின கீழ் பெரிய வெள்ளை யானை ஒன்று தன் துதிக்கையை அவரை நோக்கி நீட்டிய வண்ணம் நின்றது. இதைக்கண்ணுற்ற ஐயம்பிள்ளை உடையார் ஆச்சரியப்பட்டார். இதன்போது யானை ஆலமரத்தின் மறுபக்கம சென்று மறைந்துவிட்டது. இச்சம்பவம் அவருக்கும் ஓர் அதிசயமாகவும், மிகுந்த பயமாகவும் இருந்தது.



எனினும் அவர் அவ் யானையைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் அச் சுற் றாட லில் தேடினார். ஆனால் அவரால் யானையை மீண்டும் காணமுடியவில்லை. அவர் இச்சம்பவத்தைத் தனது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவித்து அவர்களுடன் கலந்து ஆலோசித்தார். அவர்கள் எல்லோரும் பிள்ளையார் தான் இவ்வாறு காட்சி அளித்தார் என்ற கருத்தைக் கூறினார்கள். இதன் காரணமாகவே அவர் அவ்வால விருட்ஷத்தின் அருகில பிள்ளையார் ஆலயத்தை அமைத்தார். அதுவே திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயமாக சிறப்புற்று விளங்குகிறது.

18ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பெற்ற வரலாற்றுப் பெருமை மிக்க இவ்வாலயத்தில் இன்று புதிய சித்திரத்தேரில் விநாயகன் வீதியுலாவரும் அற்புதம் நாம் செய்த தவப்பேறே யாகும்.

**பொ.வி. திருநாவுக்கரசு**

**தர்மகர்த்தா**

## ...ஆசிச்செய்தி

...பாலமைந்த யாழ்ப்
...டதீவு எனும் தீவில்
...ரிய ஷேத்திரத்தில்
... வேண்டுவன ஈந்த
...ருமானுக்கு இவவூர்
...பாலகரினதும் பேர
...த்திற்கு முன் தேர்
...லவித இடர்கள்,
...டர்ந்து எம்பெருமான்
...ளிககிழமை புதிய
...ட பெற்று இன்று
...வதை யிட்டு நாம்

...பெற எம்பெருமான்
...பக்த கோடிகளுக்கு
...டு சித்திவிநாயகப்
...கிறேன்.

...நக்கள்

...ம்பலம்
...க நிறுவனம்
...MPALAM AND CO
...ஸ்தூரியார் வீதி,
...பாணம்.
T.P : 021 222 2988,
021 222 3096.
Fax : 021 222 2368.

போட்டோ ரவி
அன் வீடியோ
139, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0777-110015,
0776-048909

பெட்டா எசன்ஸ்
சப்ளையர்ஸ்
104, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021-222-2386

...த்தகசாலை
கே.எஸ் வீதி,
...ப்பாணம்.

ஈஸ்வரபகவான் & கொம்பனி
இல: 91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021-222-2350

## இன்று ஒரு தகவல்

# குருதியின் வகைகள்

எல்லோர் உடலிலும் ஒரே இரத்தம் தான். இருந்தாலும் இந்த இரத்தத்தில் பலவகை உண்டு. இது இன்று பல பேருக்குத் தெரிந்த ஒரு செய்தி.இரத்தத்தில் பலவகையுண்டு என்பதை முதலில் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா? 1890களில் கார்ல்லாண்ட் ஸ்டினர் என்ற அவுஸ்திரேலிய நோயறி நிபுணர் தான் அதைக் கண்டுபிடித்தார்.

அதற்கு முன் சரியாக விபரம் தெரியாமல் ஒரு மனிதனுடைய இரத்தத்தை எடுத்து இன்னொரு மனிதனுக்குச் செலுத்தும்போது ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இதன்காரண மாகச் சில நாடுகளில் இப்படி இரத்தம் செலுத் துவதைத் ·தடைசெய்யக் கூடிய சட்டங் களை வகுத்துள்ளார்கள்.

பழங்காலத்திலெல்லாம் மருத்துவர்கள், இரத்த இழப்பினால் வலுககுறைந்தவர்களுக்கு விலங்குகளின இரத்தத்தைக் கூட செலுத்திப் பார்த்திருககிறார்கள். அதனால் ஆபத்துத்தான் ஏற்பட்டது.

கார்ல் லாண்ட் ஸ்டினர் என்ற இந்த நிபுணர் இரத்தவகைகளைக் கண்டுபிடிக்கும் வரையும் சிக்கல் தான். இவர் இன்னும் பல உண்மை களையும் கண்டுபிடித்தார். ஒருவகை இரத்தத் தை இன்னொரு வகை இரத்தத்துடன கலக்க விட்டால் பல சமயம் இடைஞ்சல வரும்.

ஒரு மனிதனுடைய இரத்தத்தை வேறு ஒரு மனிதரின் இரத்தத்திலிருந்து எடுக்கப்பட்ட சீரத துடன் கலந்தால முதல் இரத்தத்திலுள்ள சிவப்பணுக்கள ஒன்று கூடி கட்டி கட்டியாக ஆக்கிவிடும என்பதையும் அவர்தான் கண்டு பிடித்தார். உடலுக்குள் இதுபோல நடந்தால் இரத்தம் செலுத்தப்பட்டவர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும்.

ஆனாலும் சிலவகை இரத்தங்களை ஒன்றுடன் ஒன்று கலந்தால் இதுபோல ஆவதில்லை. என்பதையும் அவர் கண்டுபிடித்தார். 1902 இல்தான் அவர் மனிதஇரத்தத்தில் **A, B, AB, O** என்னும் நான்கு வகை இருப்பதைக் கண்டுபிடித்தார். ஒவ்வொரு மனித உடலிலும இதில் ஒருவகை இரத்தம் இருக்கும்.

ஒருவகை இரத்தத்தை அதேவகை இரத்த முள்ள மனிதர்களின் உடலில் செலுத்தி னால், கெடுதல் ஏற்படாது. **O** வகை இரத்தத்தை எல்லாவகை இரத்தம உள்ளவர்களுக்கும் செலுத்தலாம். **A** அல்லது **B**வகை இரத்தத்தை **AB** வகை இரத்தமுள்ளவர்களுக்குச் செலுத் தலாம்.ஆனால்**AB** வகை இரத்தத்தை **A** வகை அல்லது **B** வகை இரத்தம் உள்ளவர்க ளுக்குச செலுத்தக் கூடாது. **O**வகை இரத்தம உடையவர்களுக்கு மற்றவகை இரத்தங்களைச செலுத்தக் கூடாது. **A, B** ஆகிய வகை இரத்தங் களையும கலக்கக கூடாது.

இந்தக் கண்டுபிடிப்புக்காக லாண்ட் ஸ்டி னருக்கு 1930ஆம் ஆண்டு மருத்துவம மற்றும் உடல் செயல் இயலுக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது. இன்றைக்கு அறுவைச் சிகிச் சைகள் எல்லாம் சர்வ சாதாரணமாக நடப்ப தற்கு அந்த டாக்டரின் கண்டுபிடிப்பு எவ் வளவோ உதவியாக உள்ளது.

ஒரு சத்திர சிகிச்சை அறையின் உள்ளே அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. அந்த அறை வாசலில் இரண்டு பெண்கள் மிகவும் பதற்றமாக உட்கார்ந்திருந்தார்கள். ஒருபெண் இன்னொரு பெண்ணைப் பார்த்துக் கேட்டார். "நீ ஏன் இப்படிப் பதற்றத்துடன் உட்கார்ந் திருக்கிறாய்?" என்று. அதற்கு அந்தப் பெண் சொன்னார். "உள்ளே அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளப போகிறவர் என்கணவர். இதுவரை அவருக்கு எந்த நோயும் வந்ததில்லை. இது தான் முதல் சிகிச்சை. இது நல்ல விதமாக முடியாவிட்டால் எதிர்காலம என்ன ஆகிவிடு மோ என்று பயமாக உள்ளது" என்றார்.

"இந்த அறுவை சிகிச்சை நல்ல விதமாக முடியாவிட்டால் எனது எதிர்காலமும் என் னாகி விடுமோ என்றுதான் நானும் பயந்து கொண்டிருக்கிறேன்" என்றார் மற்றய பெண். "நீ யார்?" என்று கேட்டார் இவர். "உள்ளே சத்திர சிகிச்சை செய்யப் போகிறவர் என் கணவர் அவருக்கும் இதுதான் முதல் சிகிச்சை" என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மூளாய் வைத்தியசாலை விடுதிகள் அமெரிக்க அதிகாரிகளால் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவின் நிதியுதவியுடன் யு.எஸ். எயிட் நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்ட மூளாய் வைத்தி யசாலையின் வைத்திய விடுதிகள் இரண்டு கடந்த புதன் கிழமை காலை10.00 மணிக்கு அமெரிககத் தூதரகத் தொடாபாடல் அதிகாரி பிலிப் பிளறன்ால நாடா வெட்டித்திறந்து வைக்கப்பட்டு, வைத்தியசாலை நிர்வாகததிடம் கையளிக்கப்பட்டது.

இக் கையளிப்பு வைபவத்தில் கலந்துகொள்வ தற்காக அமெரிக்கத்தூதரக அதிகாரிகள் ஐந்து போ அடங்கிய குழுவினர் வருகை தந்திருந்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மூளாய் வைத்திய சாலை பிரசவ விடுதிக்குத் தேவையான வைத்திய உபகரணங்களையும் கையளித்தனர்.

இதேவேளை, ஏன்ட்விஸ்ள், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் கர்ப்பிணி மாதர் பிரிவின் தேவைக கான புதிய உபகரணங்களை கையளித்ததுடன், மறுசீரமைக்கப்படட வைத்தியர்களின் விடுதிகள் இரண் டையும் பார்வையிட்டாா.

அதன்பின்னர், அவர் சண்டிலிப்பாயில் இரு அர சாங்க நலன்புரி நிலையங்களில் அகதிகளுக்கான அமெரிக்கத் தூதரின் நிதியத்தின் 20 ஆயிரம் அமெரிக்க டொலர் உட்பட -அமெரிக்க உதவியின் கீழ் தற் காலிக வதிவிடங்களை வழங்கிய 450 குடும்பங் களுக்கான நீர், மலசலகூடவசதிகளை மேம்படுத்தும பணிகளையும் பார்வையிட்டார்.

அன்று பிற்பகல் யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்த அவர், சாவகச்சேரி நிலையத்தில் இயங்கும குடி[illegible]க் கைத்தொழில் நிலையத்தில் தொழில் புரியும் விதவைகளை உள்ளடக்கிய 20 குடும்பத்தலை விகளுக்கான 5 தையல் இயந்திரங்களையும் கைய ளித்தார்.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை மேற் கொளளும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவா நிலையத்தில் இடைக்கால முன் முயற்சி கள் அலுவலகம் நீண்டகால முரண்பாட்டை பேச்சுவாத் தை மூலம், முடிவுக்குக் கொண்டுவரத் தேவையான உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளது.

இடைக்கால முன்முயற்சிகள் அலுவலகத்தின் மூலம் மேற்கொளளப் பல நடவடிக்கைகள் சமாதானத்தின் உண்மையான நலன்களைத் தருவதுடன் சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமாக சரியானதும் சமநிலை யானதுமான தகவல்கள் பரிமாறுவதை அதிகரித்து சமு தாயங்களுக்கிடையில் முரண்பாடு முகாமைத்துவம் மற்றும் சாமாதானத்தை நிலைநாட்ட உதவும்.

2003 மார்ச் மாதம் முதல் சர்வதேச அபிவிருத்திக் கான அமமொிக்க முகவா நிலையம் இடைக்கால முன் முயற்சிகள் அலுவலகம் மூலம துரித மற்றும் சிறிய 190 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 4.2 மில்லியன அமெரிக்க டொலர்களை அன்பளிப்புச் செய்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

(ந-க,19)

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதே சமாதானத்திற்கான ஒரேவழி !

## வவு.வெகுஜன அமைப்புகள் ஜனாதிபதிக்கு மகஜர்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ் நிலை மீண்டும் ஓர் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு விடுமோ என்ற ஐயப்பாட்டினைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நிலையில் இடைக்கால நிர்வாக சபை யோசனையை மீண்டும் கவனத்திலெடுத்து ஆராய்ந்து இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தின் ஆரம்பக் கட்டமாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இடைக் கால நிர்வாகத்தை வழங்குவதன் ஊடாக சமாதானத தீர்விற்கு வழி வகுக்க வேண்டும்.

இவ்வாறு வவுனியா மாவட்ட வெகுஜன அமைப் புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி மகஜரில்,

இந்த நாட்டில் கடந்த பல வருடங்களாகப் புரையோ டியுள்ள தேசிய இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நற்சிந்தையுடன் இரண டரை வருடங்களுக்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.

அதனூடாக திறந்த சமாதானத்திற்கான பேச்சு வார்த்தைகள் ஐரோப்பிய நாடுகளின் அனுசரணையு டனும் மேற்பார்வையுடனும் உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் நடைபெற்று வந்தன.

ஆனால்,சில தவிர்க்க முடியாத காரணங்களினால் அம் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகள் ஏற்பட்டன.

இதனால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டன.

இதனை மீள ஆரம்பிப்பதன் மூலமே நாட்டின் சமாதானத்திற்கு வழியேற்படுத்த முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-8)

## இராசி பலன்

28. 08. 2004 *(ஆவணி 12, சனிக்கிழமை)*

திரியோதசி பி.ப 12. 40 மணிவரை

திருவோணம் முன்னிரவு 11. 28 மணிவரை

இராகுகாலம் 9. 05 - 10. 35 மணிவரை

சுபநேரம் 3. 05 -4. 35 மணிவரை

நடேஷர் அபிஷேகம், ஆவணி ஓணம்

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, அதிகாரம், தொழில் நன்மை, காரிய சித்தி.

**இடபம்**
புதியதிட்டமிடல், சாரப் பிரயாசை,பிரயாணம்,உடல் நலக் குறைவு.

**மிதுனம்**
முயற்சி தடங்கல்,வண் பிரச்சினை,வாகன பயம், போசன சுகம்.

**கடகம்**
வாக்குமேன்மை, பிரயாண நன்மை, கலந்துரை யாடல், குடும்ப சுகம்.

**சிங்கம்**
தெய்வ தரிசனம், நல்ல சம்பவம்,காரிய நன்மை, உடல் நலம்.

**கன்னி**
முயற்சி தாமதம், மனச் சஞ்சலம், சிறுவியாதி, குடும்பக் கவலை.

**துலாம்**
எடுத்த காரியம் தாமதமாகும், ரோக பயம், சத்துரு ஜெயம், புதிய முயற்சி.

**விருச்சிகம்**
சகோதரர் உதவி, பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, பொருள் சேர்க்கை.

**தனுசு**
கோபப்படுதல், தனவிரயம், காரிய தாமதம், மாதர் நட்பு.

**மகரம்**
விருந்துபசாரம், சொத்துக்களால் நன்மை, தேக நலன், பெருமையடைதல்.

**கும்பம்**
தேக ஆரோக்கியம், காரிய தாமதம், சுபசெலவு, பிரயாண அலைச்சல்.

**மீனம்**
புதிய திருப்பம், போசன சுகம், காரிய சித்தி, கலந்துரையாடல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# அப்துல்காதர் எம்.பியின் பிணைமனு நிராகரிப்பு

(கொழும்பு)

மோசடிக் குற்றச்சாட்டு வழக்கு ஒன்றின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சரும்,ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப் பினருமான அப்துல்காதருக்கு பிணை வழங்கு மாறு அவரது சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை கொழும்பு பிரதான நீதவான் குசாலாவ சரோஜினி வீரவர்த்தன நிராகரித்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அப்துல் காதர் அரசாங்கத்தின் நிதியை மோசடி செய்ய வில்லை என்று அவரது சார்பில் ஆஜரான சட்டத் தரணி வாதிட்டார்.

அதேவேளை, அரசாங்கத்தின் நிதியில் 10 லட் சம் ரூபாவை மோசடியான முறையில் கையாண்ட குற்றச்சாட்டின் பேரில் அப்துல்காதருக்கு எதிராக பொலிஸ் தலைமையலுவலக ஊழல் விசாரணைப் பிரிவு மேற்கொள்ளும் விசாரணை அறிக்கை தொடர் பாக சட்டமா அதிபரின் கருத்துக்களைத் தெரிவிக் குமாறு உத்தரவிட்ட நீதவான், அப்துல்காதரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். கடந்த மாதம் றம்ழான் மாதத்தின் போது முஸ்லிம் பள்ளி களுக்கு அரிசி வழங்குவதாகத் தெரிவித்து சமுர்த் திப் பாதுகாப்பு நிதியிலிருந்து 10 லட்சம் ரூபா நிதியினை தனது தனிப்பட்ட ரீதியிலான காசோ லை ஒன்றின் மூலம் பெற்றிருப்பதாக பொலிஸார் நீதிமன்றத்துக்கு தெரிவித்திருக்கின்றனர்.

(த-08)

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. - குறள்

வலம்புரி

# தமிழ்க்கைதிகள் சபிக்கப்பட்டவர்களா?

தமிழர்கள் என்பதால் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளின் விடுதலை குறித்து எந்தவித நடவடிக்கைகளும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, எதுவித நீதி விசாரணைகளும் இன்றி சிங்களப் பொலிஸாரும், இராணுவமும் கைதுசெய்த அப்பாவித் தமிழ் இளைஞர், யுவதிகள் வருடக்கணக்கில் சிறைச்சாலைகளுக்குள் அடைபட்டு தங்களின் வாழ்வை இழந்து போயுள்ளனர்.

பயங்கரவாத - அவசரகாலத் தடைச்சட்டங்கள் தற்போது அமுலில் இல்லாதபோதிலும், அந்தச் சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யாமல் தடுத்து வைத்திருப்பது மிகப் பெரும் மனித உரிமை மீறலாகும்.

அரசும், விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செய்து கொண்டதன் மூலம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலி உறுப்பினர்களும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவமும் ஆயுதங்கள் இன்றி நடமாடுவதற்கு அனுமதியுண்டு.

ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினர்களாக அல்லது விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழ் இளைஞர், யுவதிகளை கைதுசெய்து தடுத்து வைத்திருக்கும் நடவடிக்கையானது ஈழத் தமிழர்களுக்காகக் கேட்பதற்கு யாருமே இல்லை என்பது போன்ற நிலைமையை உணர்த்தியுள்ளது.

நோர்வேயின் அனுசரணையுடன் அரசும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையானது எந்த நேரத்தில் இருந்து நடைமுறைக்கு வந்ததோ, அந்த கணத்தில் இருந்து பயங்கரவாத, அவசரகாலத் தடைச்சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலை பெறவேண்டும்.

எனினும், அத்தகைய நடவடிக்கைகள் ஏதும் நடைபெற்றதாக இல்லை. மேலும், யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செய்துகொண்ட அரசும், விடுதலைப் புலிகளும் கடந்த காலங்களில் சமாதானம் குறித்து ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியபோது, சிறைகளில் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலை குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போது கைதிகளின் விடுதலை குறித்து சட்டமா அதிபரிடம் தொடர்பு கொண்டு உடன் நடவடிக்கை எடுப்பதாக அரசு உறுதியளித்திருந்தது.

ஆனால், அந்த உறுதிமொழியானது செயலுருப் பெறாமல் அப்படியே அடங்கிப் போயிற்று. சமாதானச் சூழ்நிலையில் தமக்கு விடுதலை கிடைக்கும், சிறை வாழ்வுக்கு முடிவு கட்டப்படும், நாமும் மற்றவர்கள் போல் தாய், தந்தை, சகோதரர்கள் என்ற உறவுகளோடு தங்கள் பாசப் பிணைப்பை பகிர்ந்து கொள்ளலாம் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது. இவ்வாறு சிறைகளில் வாடுகின்ற கைதிகள் இடையிடையே தங்களால் மேற்கொள்ளக்கூடிய உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்துகின்றபோது,

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கைதிகளின் ஞாபகம் வந்தவர்களாக சிறைச்சாலைகளுக்குச் சென்று உண்ணாவிரதத்தை கைவிடும்படியும், விடுதலைக்காக தாம் உரியவர்களிடம் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி கூறுவர்.

அவர்களின் உறுதிமொழியை நம்பிய கைதிகள் தங்கள் போராட்டத்தை கைவிடுவர். பத்திரிகைகளும் தங்கள் வர்த்தகப் பணியாக அவற்றை பிரசுரிக்கும்.

அவ்வளவுதான். அந்த மட்டோடு நடவடிக்கைகள் உறங்கிவிடும். என் செய்வது இன்று; நாளை என்று விடுதலையை எதிர்பார்த்தவாறு சிறைக்குள் வாழ்பவர்களின் நம்பிக்கை, கற்பனைகள் யாவும்...?

# விடுதலைப் புலிகள் மீதான கடும்போக்கை அமெரிக்கா குறைக்க வேண்டும்

## நோர்வே பிரமுகர்கள் மிலிந்தவிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஐககிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுடன் நடத்திய சமாதானப் பேச்சுவாத்தைகளில் கலநது கொண்டவரும் முன்னாள் அமைச்சருமான மிலிந்த மொறகொட நோர்வே சமாதான ஏற்பாட்டாளாகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக இணையத்தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் இந்த வார முற் பகுதியில் பேச்சுவார்த்தை இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட அழைப்பின் பேரில், நோர்வேக்கு விஜயம் செய்த மிலிந்த மொறகொட அங்கு நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதர் ஹெல்கசன் மற்றும் சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் ஆகியோரைச் சந்தித்து இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவாாத்தைகளை மீள அரம்பித்தால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என்புதை விளக்கிக் கூறினார்.

இதேவேளை, அமெரிக்கப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் றிச்சேட் ஆர்மிடேஜ் மற்றும் பாதுகாப்புத் துறை செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா ஆகியோருடன் உள்ள நெருக்கமான தொடர்புகளைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் மீதான அமொிக்காவின் கடும் போக்கினைக் குறைக்க நடவடிக்கை எடுக குமாறு நோ்வேத் தரப்பு மிலிந்த மொறகொடவிடம் கோரிய தாகவும்அந்த இணையத்தளம்மேலும் தெரிவித்துள்ளது. (றக)

## நல்லைச் சூழலில் இன்று

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற் சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத் தினால் தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தின் ஆதரவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை நடாத்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கில் எட் டாம் நாளான இன்று தாரணி ரஞ்சனின் இசைக் கசசேரி இடம்பெறவுள்ளது.

அத்துடன், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களதத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் இரவு 7 மணிக்கு நடாத்தப்பட்டு வரும் முத்தமிழ் நிகழ்வுகளில் இன்று சாந்தினி பற்பநாதனின் இசைக் கச்சேரி நடைபெற வுள்ளது.

மற்றும் இலங்கை சின்மயமிஷன் ஏற்பாட்டில் இந்து விழிப்பு வாரத்தையொட்டி இரவு 7 மணிக்கு நல்லூர் தெற்குவதி, திறந்த வெளியில் பிரமாண்டமான திரையில் "பாரதி" ஹும்தமிழ்த் திரைப்படம் காண்பிக் கப்படவுள்ளது. (த-7)

## ஸ்ரீ.மு.காவிலிருந்து நீக்கப்பட்ட மூவரும் அரசுடன் இணைவார்கள்?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக் கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைய விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக்கியமை தவறானது என்று உயர் நீதிமன் றம் தர்ப்பளித்திருக்கும் நிலையில் இவர்களது பாராளு மன்ற உறுப்புரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதுவரை காலமும் பாராளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்பட விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை நீக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இவர்கள் அரசாங்கத்துடன் இணைய விருப்பதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, இம் மூவருக்கும் பிரதியமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் தற்சமயம் இலண்டனில் தங்கி யுள்ள ஜனாதிபதி நாடுதிரும்பியதும் இவர்களைச் சந்தித்துப்பேச ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இவாகளை அரசில் இணைப்பதன் மூலம் 108 ஆசனங்களுடன் அரசாங்கம் பலமடையுமென்று அரசு தரப்பு நம்பிகை கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ற-க,8)

## நாட்டில் அமைதி ஏற்பட புலிகளும் - அரசும் பேச வேண்டும்

### க.கா.குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடடில் அமைதிச்சூழல் ஒன்றை ஏற்படுத்துவ தானால் இடைநிறுத் தப் பட்டுள்ள சமாதானப்பேச்சு வார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பதற்குத் தேவை யான கள நிலைமைகளைத் தயார் செய்வதற்கு உட னடியாக ஏதாவது செய் தாக வேண்டும் என யுத்த நிறுத் தக் கணகாணிப்புக் குழுவின் தலைவர் ரொன் பியுறுாவ் ஹெவ்டே தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழச்செல்வனைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தாா.


இதுவிடயம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில் நாங்கள் இது தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்களை தமிழ்ச்செல்வன் ஏற்றுக்கொண்டுள்ளார். கிழக்கு மாகாணத்தில் இரு தரப்பினரிடையேயும் தொடர்புகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான முயற்சிகளுக்கு அவர் ஆதரவு தெரிவித்திருக்கின்றார்.

இதனைச் செய்வதற்குரிய வழிமுறையினைக் காணலாம் என நான் நம்புகின்றேன். அண்மைக் காலங்களில் கிழக்கில் இடம்பெற்று வருகின்ற கொலைச் சம்பவங்கள் தொடர்ந்தும் இனிமேல் இடம்பெறாமல் இருப்பதற்கு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொண்டாக வேண்டும் எனத் தெரிவித்தார். (ற-க,121)

## பாராளுமன்றக் குழு தலைவர் பதவியில் மாற்றம்

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமய கட்சி தனது பாராளுமன்றக் குழுத தலைவர் பதவியில் மாற்றம் ஒன்றைக் கொண்டு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அக்கட்சியின் தற்போதைய தலைவராக வண.அத்துரலிய ரத்தின தேரா பதவி வகித்து வருகினறாா். இவா் அண்மையில் மேற்கொண்ட சில முடிவுகளினால் கட்சியின் உயர் பீட பௌத்த சங்கத்தினர் சிலர் விசனமடைந்துள்ள நிலையிலேயே பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் மாற்றம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. புதிய தலைவராக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தவைவர் வண.எல்லாவெல மேதானந்த தேரர் நியமிக்கப்படக் கூடுமென சம்பந்தப்பட்ட வாட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-121)



யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத்தினால் கடந்த வியாழக்கிழமை நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படம். (கு.ஐங்கரன்)

## மதமாற்றத் தடைச்சட்ட மசோதா குறித்த சர்வமதக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"மதமாற்றத்தடைச் சட்ட மசோதா" தொடர்பான சர்வமத கலந்துரையாடல் ஒன்று அண்மையில் சமாதான மனித உரிமைப் பண்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்றது. இதில் மதத் தலைவர்கள் உட்பட முக்கிய பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசு அமுல்செய்ய முனையும் மதமாற்றத் தடைச்சட்டம் வடபகுதி மக்களாகிய எம்மைப் பொறுத்தவரை வேண்டாத விடயமாகும். தமிழ் மக்களிடையேயும் மதத் தலைவர்களிடையேயும் காலாகாலமாக ஒற்றுமையும் புரிந்துணர்வும் நிலைத்து வந்துள்ளது. குறிப்பாக வன்முறையின் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்த காலப்பகுதியில் நாம் ஒன்றித்து செயல்பட்டமை யாவரும் அறிந்ததே.

ஆயினும் மிக அண்மைக்காலத்தில் மதமாற்றம் தொடர்பாக மனதைப் புண்படுத்தும் சில சம்பவங் கள் இடம்பெற்று வருவதுடன் இவை எமது ஒற்று மையைப் பிளவுபடுத்துவதாயும் உள்ளன.

எனவே இந்நிலையில் பிளவுகளை ஏற்படுத்தி விடுதலைப் பயணத்தைத் திசை திருப்ப எத்தனிக் கும எந்த சக்திக்கும் இடம்கொடாது அனைவரும் தத தம் மதத்தில் உறுதியான பற்றுக்கொண்டு ஒற் றுமையை பேணிக்காக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென மேற்படி கலந்துரையாடலில்வலியுறுத்தப்பட்டது. (ற)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நீங்கள் தொடர்ந்து பிரார்த்தனை செய்யலாம். உலகிலுள்ள எல்லா சாஸ்திரங்களையும் படிக்கலாம். எல்லா தெய்வங்களையும் வழிபடலாம். ஆனால் ஆன்மாவை உணராத வரை உங்களுக்குச் சுதந்திரம் கிடையாது. வெறும் பேச்சோ கொள்கையோ தீர்க்கமோ அல்ல. அனுபூதி பெற வேண்டும். அதைத் தான் நான் செயல் முறை மதம் என்று சொல்கிறேன்.

சுவாமி விவேகானந்தர்

# படையினரை வெளியேறக்கோரி நீதிமன்றம் செல்லத் தீர்மானம்!

## தென்மராட்சி பொது அமைப்புக்கள் ஏற்பாடு

(திருநெல்வேலி)

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்கள் குடியிருப்புகளை ஆக்கிரமித்திருக்கும் படையினரை வெளியேறக் கோரி தென்மராட்சி மக்கள் நீதிமன்றம் செல்ல முடிவெடுத்துள்ளனர்.

தனங்கிளப்பு, மறவன்புலவு, நாவற்குழி பிரதேச மக்கள் தமது வீடுகளுக்குச் செல்ல பல போராட்டங்கள் நடத்தியும் பயனளிக்காத நிலையிலேயே நீதிமன்றம் சென்று நியாயம் கேட்க முடிவெடுத்துள்ளனர்.

இதற்கான ஆயத்தப் பணிகளை அப்பகுதி சனசமூக நிலையமும், வேறு சில பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் மக்கள் சார்பாக மேற்கொண்டு வருகின்றனர். (த-08-43)

## விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்ட

# இரு ஊர்காவல்படையினரை உறவினர்கள் பார்வையிட்டனர்

(திருநெல்வேலி)

திருகோணமலை திரியாய்ப் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி ஆயுதங்களுடன் சென்ற போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட இரண்டு ஊர்காவல் படையினரையும் நேற்று அவர்களின் உறவினர்கள் பார்வையிட்டனர்.

விடுதலைப் புலிகளின் சம்பூர் அரசியல் துறைச் செயலகத்தில் வைத்து சுமார் இரண்டு மணி நேரம் அவர்கள் உறவினர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

இவர்களுடன் கைதுசெய்யப்பட்ட 5 பொதுமக்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, தமிழீழ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இச் சந்திப்பிற்கான ஏற்பாட்டை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட பிரதிநிதி பற்றிக் மேற்கொண்டிருந்தார். இச் சந்திப்பின் போது திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனும் கலந்து கொண்டிருந்தார்.

(ச,121)

## மாதர் சங்கம நிகழ்வு

வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி மேம்பாட்டு நிறுவனத்தின் சமாதானம், கலாசாரம், அரசியல் மற்றும் சமூகம் சம்பந்தமான மாதர் சங்கம நிகழ்வு இன்று சனிக்கிழமை மருதங்கேணி இந்து வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் கொழும்பு, யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வை வடமராட்சி மாதர் சங்கமும் கடற்புலிகளும் இணைந்து நடாத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ரு-க,43)

# அமெரிக்க அதிகாரிகள் குழு விரைவில் இலங்கை வரும்

(கொழும்பு)

துறைமுகப் பாதுகாப்புக் குறித்து ஆராய்வதற்கென அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று விரைவில் இலங்கை வரவுள்ளது.

இலங்கை - அமெரிக்காவுடன் செய்து கொண்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையிலேயே இக்குழு இலங்கை வரவுள்ளது.

இலங்கை வரும் அமெரிக்க அதிகாரிகள் குழு, துறைமுக அதிகாரிகள் மற்றும் இலங்கைக் கடற்படையின் உயர் அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சு நடத்தவுள்ளது. (க)

## மண்டைதீவில் இன்று தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா இன்று நடைபெறுகின்றது.

காலை 7.30 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து யாக பூசை, தம்ப பூசை என்பன நடைபெற்று விநாயக[illegible] பெருமான் காலை 10.45 மணிக்கு தே[illegible] ஆரோகணிப்பார்.

13 வருடங்களின் பின்னர் நடைபெறும் இவ் வருட மஹோற்சவத்தில் புதிய சித்திரத் தேர் இம்முறை பவனி வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## சிலோன் விஜயேந்திரன் சென்னையில் காலமானார்

எழுத்தாளரும், நடிகருமான சிலோன் விஜயேந்திரன் நேற்று முன்தினம் சென்னையில் இடம்பெற்ற தீ விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

பைலட் பிறேம்நாத் மற்றும் புன்னகை மன்னன் போன்ற தென்னிந்தியத் திரைப்படங்களில் துணை நடிகராக நடித்த இவர், யாழ்ப்பாணம் மல்லாகத்தைச் சேர்ந்தவராவார்.

பாரதியார் நாடக நூல் உள்ளிட்ட பல நூல்களை வெளியிட்டுள்ள இவர், கவிதை நூல்கள் பலவற்றையும் வெளியிட்டார்.இவர் ஒரு கலைப் பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கது. (து)

# அப்துல்காதரை விடுவிக்கக்கோரி கண்டியில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான அப்துல் காதர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கண்டியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் அப்துல் காதரை விடுதலை செய்யக் கோரி கோஷம் எழுப்பினர். ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பிரதேசத்தில் கறுப்பு கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

அப்துல் காதர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. 10 இலட்ச ரூபா மோசடி குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் இவர் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே. (த-08)

# தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி தேவை

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகளுக்காக விண்ணப்பிக்கும் போது ஒவ்வொருவரும் தமது பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியை சமர்ப்பிப்பதை கட்டாயமாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தேசிய அடையாள அட்டையை வழங்கும்போது, தற்போது நிலவும் மோசடிகளை குறைக்கும் நோக்கிலேயே இந் நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் கிராம சேவகரிடம் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை வழங்கும் நடைமுறையே இதற்கு முன்னர் இருந்து வந்தது.

இருப்பினும் கடந்த காலங்களில் தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதில் திணைக்களத்தினுள் இடம்பெற்ற மோசடிகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இவற்றுக்கு பெரும்பாலும் பிறப்புச் சான்றிதழின் பிரதிகளே பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரி[illegible] வந்துள்ளது.

## தனியார் பஸ் கட்டணம் அடுத்த மாதம் அதிகரிப்பு

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணங்கள், ஆகக் குறைந்த கட்டணம் 3 ரூபாவிலிருந்து 3 ரூபா 50 சதமாக அதிகரிக்கப்படவுள்ளது. பஸ் கட்டண மாற்றங்கள் தொடர்பாக அமைச்சரவை உப குழுவுடனான பேச்சுவர்த்தையின் பின்னரே இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் முதலாம் திகதி முதல் அதிகரித்த பஸ் கட்டணம் நடைமுறைக்கு வருகின்றது. (த-08)

# அரசாங்கத்தின் இரு தரப்பினரும் ஒரே கருத்தைத் தெரிவிக்க வேண்டும்

## ஐ.தே.க. ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் அமைதி சூழல் எவ்வளவு காலத்துக்கு நீடிக்குமென்பதை உறுதியாக கூறமுடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தரப்பினரில் ஒரு தரப்பினர் ஒரு வகை நிலைப்பாட்டை முன் வைக்கும்போது, மறுதரப்பினர் இதற்கு முற்றிலும் மாறான நிலைப்பாட்டை முன்வைக்கின்றனர்.

புலிகளின் இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க தயார் என்று அரசில் ஒரு தரப்பு தெரிவிக்கின்றது.

ஆனால் மறுதரப்பு இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறி விடுவதாக மறுதரப்பு கூறுவது அரசாங்கத்துக்குள் பரஸ்பர முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது.

இந்நிலை மாறி அரசினுள் உள்ள இரு தரப்பும் ஒரே அடிப்படையில் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென்று அவர் மேலும் தெரிவித்தார். (121,08)

## சமாதான நடவடிக்கைகளிலிருந்து...

ஏற்பாட்டாளராக பணியாற்றி வந்த எரிக் சோல்ஹெய்ம் ஏற்பாட்டாளர் என்ற அந்தஸ்தை மீறி விடுதலைப்புலி உறுப்பினர்களை தமது நாட்டிற்கு அழைத்துச் செல்கிறார். பெருமளவான விடுதலைப் புலி உறுப்பினர்களை தமது நாட்டிற்கு அழைத்துச் சென்று பல்வேறு பயிற்சிகளை வழங்க ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

ஏற்பாட்டாளர் என்ற அந்தஸ்துடன் வந்த நோர்வே தற்போது விடுதலைப் புலிகளுக்கு ஊக்கமளித்து அவர்களை பலப்படுத்தும் நடவடிக்கைகளுக்குத் துணை போகின்றது. இதன் சூத்திரதாரியான எரிக் சோல்ஹெய்மை உடன் அப் பதவியில் இருந்து விலக்க வேண்டும், அல்லது சமாதான ஏற்பாட்டாளர் நடவடிக்கையில் இருந்து நோர்வே விலக வேண்டும் என ஜே.வி.பி அக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்திலும் சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக குற்றஞ்சாட்டி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அப்போது சமாதான முயற்சிகளை இடைநிறுத்தியிருந்தார்.

தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. சமாதான முயற்சியில் இருந்து நோர்வேயை வெளியேற்றுமாறு கோருகிறது.

இந் நிலையில் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்தைகளை காலம் தாழ்த்தியேனும் ஆரம்பிக்கப்படக் கூடிய சூழ்நிலை இல்லை எனவும் அவ்வாறு இல்லாமல் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தாலும் கூட ஜே.விபி. அதனை கடுமையாக எதிர்க்க தயாராகிவிட்டதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இதேவேளை, விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனையை பேச்சுக்களில் ஆராய்ந்தால் அரசுக்கான ஆதரவை உடன் விலக்கிக்கொள்வோம் என ஜே.வி.பி. ஏற்கனவே எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## ராசிக்குழு...

என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுத் துறையில் பணியாற்றிய போது கொல்லப்பட்ட ரிதி என்பவரின் சகோதரன் எனவும் பாதுகாப்பு காரணங்களுக்காகவே தான் கைக்குண்டினை வைத்திருந்ததாகவும் சந்தேக நபர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

ராசிக் குழுவில் உள்ள தனது நண்பர்களைச் சந்தித்துவிட்டுத் திரும்பும் போதே தான் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம். அக்மீர் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் (ச-08)

## பிரதமரின்...

சரவைக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை தொழிற்சாலைப் போராட்டங்கள் நடைபெறும்போது பொலிஸார் தொழிற்சங்கவாதிகள் மீது மேற்கொள்ளும் வன்முறைகள் குறித்தும் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் இது பற்றிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபரை அமைச்சரவை கேட்டுள்ளது. (ரு-க)

## கருணா...

வேண்டியிருந்தபோதிலும் அவர் ஆஜரபடுத்தப்படவில்லை.

பிரஸ்தாப கைதி பாதுகாப்பு காரணங்களுக்காகவே பதுளை சிறைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிவானுக்கு தெரியப்படுத்தினார். கைதி இடமாற்றம் செய்யப்பட்டமைக்கான காரணத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி அவரை எதிர்வரும் 10 ஆம் திகதி மட்டக்களப்பு சிறைச்சாலையில் ஆஜர்படுத்துமாறு மட்டக்களப்பு சிறைச் சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார். (ச)

## எம்முடன் பேச...

கூறியுள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகள் என்ன விடயங்கள் பற்றி எம்முடன் பேசப் போகின்றார்கள் என்பதை எமக்கு சுருக்கமாக குறிப்பிட்டால், நாம் அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம்.

அதன் பின்னர் அவர்களுடன் பேசுவதா? விடுவதா? என்ற முடிவை உத்தியோக பூர்வமாக அறிவிப்போம் என்றார். (ரு-க)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.